# மாலை முரசு

பக்கங்கள் 18+ 03


## யாழில் முதியவர் படுகொலை: இருவருக்கு மரணதண்டனை!



(எஸ்.நிதர்ஷன்) யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற படு கொலை சம்பவம் தொடர்பில் குற்றவா ளிகளாக காணப்பட்ட இருவ 02

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | தை 06 செவ்வாய்க்கிழமை 20.01.2026 | அதிர்வு 174

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# யாழில் வீதியில் நடந்து திரிந்த ஜனாதிபதிக்கு எம்மைச் சந்திக்க நேரம் கிடைக்கவில்லையா?

## ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாக பாதிக்கப்பட்ட மக்கள் போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்ட வீட்டுத் திட்டங்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குமாறு கோரி வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாக இன்று கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

“யாழ். வந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வீதியில் சுதந்திரமாக நடந்து திரிந்தார். ஆனால், வீடுகள் இல்லாமல் அரைகுறை வீடுகளில் தங்கியுள்ள எங்களைச் சந்திப்பதற்கு அவருக்கு நேரம் கிடைக்கவில்லையா?” 02

## கிராமசேவையாளர் மீது தாக்குதல் சம்பவம்

# நேற்றே நீதிமன்றத்தில் சரணடைந்து பிணை பெற்றார் இளங்குமரன் எம்.பி.

கடந்த நவம்பர் மாதம் இறுதியில் பேரிடர் சமயம் கிளிநொச்சியில் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டிருந்த கிராம சேவையாளர் ஒருவரைத் தாக்கினார் என்று யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.இளங்குமரனுக்கு எதிராகக் குற்றம் சுமத்தப்பட்ட வழக்கு இன்று கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட இருக்கையில், நேற்று நகர்த்தல் பத்திரம் ஒன்றை மன்றில் சமர்ப்பித்து, அதன் பின் மன்றில் சரணடைந்து பிணை பெற்றுச் சென்றிருக்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன்.

ஏற்கனவே இந்த விடயத்தில் பொலிஸ் பிணையில் 02









## யாழில் வீதியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று போராட்டக்காரர்கள் இதன்போது கேள்வி எழுப்பினர்.

அவர்கள் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

"தற்போதைய ஆளுநரான நா.வேதநாயகன், 2019ஆம் ஆண்டு யாழ். மாவட்ட செயலராகக் கடமையாற்றிய காலத்தில் அரசால் நடைமுறைப்படுத்தப்பட்ட வீட்டுத் திட்டங்களுக்கான கொடுப்பனவுகள் இன்றுவரை வழங்கப்படவில்லை.

இதனால் அந்தக் காலப் பகுதியில் வீட்டுத் திட்டங்களைப் பெற்ற பயனாளிகள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் தமது அன்றாட வாழ்க்கையை நடத்தி வரும் நிலையில், மழைக் காலங்களில் இருக்க இடம் இல்லாமல் அல்லலடும் நிலைமை பல வருடங்களாகத் தொடர்கின்றன.

தற்போதைய அரசு பாரபட்சமற்ற அரசு எனக் கூறி ஆட்சிக்கு வந்த பின்னர், கடந்த ஆட்சியாளர்களிடம் பெற்ற வீட்டுத் திட்டங்களுக்கான கொடுப்பனவுகளை வழங்காமல் தங்களது ஆட்சியில் புதிய வீட்டு திட்டங்களுக்கான கொடுப்பனவை வழங்குகின்றார்கள்.

இந்தச் செயற்பாடு பாதிக்கப்பட்ட எமக்கு மிகவும் மன வேதனையைத் தருவதோடு தற்போதைய ஆளுநர் கூட இது தொடர்பில் மௌனமாக இருப்பது நமக்கு மிகுந்த மன வருத்தத்தைத் தருகின்றது.

யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வீதியில் சுதந்திரமாக நடந்து திரிந்தார். ஆனால், யாழ். மாவட்டத்தில் வீடுகள் இல்லாமல் அரைகுறை வீடுகளில் தங்கியுள்ள எங்களைச் சந்திப்பதற்கு அவருக்கு நேரம் கிடைக்கவில்லை.

ஆகவே, எமது பிரச்சினை தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநருக்கு மீண்டும் தெரியப்படுத்தியுள்ளோம். எமது பிரச்சினையை விரைந்து தீர்க்காவிடின் எமது போராட்டம் தொடரும்." – என்றனர்.

## நேற்றே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுவிக்கப்பட்டிருந்த இளங்குமரன் எம்.பி., வழக்கு கடந்த 16ஆம் திகதி நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது மன்றில் முன்னிலையாகவில்லை. அதனால் அவருக்கு பிடிவிறாந்து பிறப்பிக்கும்படி பாதிக்கப்பட்ட கிராம சேவையாளர் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் நீதிமன்றத்திடம் கோரியிருந்தார். எனினும் அன்றைய தினம் நிரந்தர நீதிவான் மன்றில் பிரசன்னமாகி இருக்காமல் வழக்கு பதில் நீதிவான் முன்னிலையில் எடுக்கப்பட்ட காரணத்தினால் பிடிவிறாந்து பிறப்பிக்கப்படவில்லை. பதிலாக நான்கு நாள்களில் – அதாவது இன்று – வழக்கை மீண்டும் எடுத்துக்கொள்ள நீதிமன்றம் தீர்மானித்தது.

இந்தநிலையில் நேற்றே இளங்குமரன் சார்பில் ஒரு நகர்த்தல் பத்திரம் மன்றில் சமர்ப்பிக்கப்பட்டு, அது எடுக்கப்பட்ட போது இளங்குமரன் மன்றில் முன்னிலையானார்.

இன்று நாடாளுமன்ற அமர்வு இருக்கின்ற காரணத்தினால், தான் நாடாளுமன்றுக்குச் செல்ல வேண்டி இருக்கின்றது என்றும், அதனால் முற்கூட்டியே ஒரு நாள் மன்றில் முன்னிலையாகின்றார் என்றும் இளங்குமரன் தரப்பில் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

அதனை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம் அவரை ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதித்தது.

எனினும், ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டபடி வழக்கு இன்றும் எடுத்துக்கொள்ளப்பட்டது. அதனை அடுத்து வழக்கு செப்டம்பர் 28 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## யாழில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் மரணதண்டனை வழங்கியுள்ளது.

கொடிகாமம், மந்தைவெளிப் பகுதியில் கடந்த 2010ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அந்தப் பகுதியைச் சேர்ந்த 60 வயதுடைய முதியவர் ஒருவர் கோடாரி மற்றும் பொல்லுகளால் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைகள் யாழ் . மேல் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில் இன்று வழக்குத் தீர்ப்புக்காகத் திகதியிடப்பட்டிருந்தது.

தீர்ப்புக்காக வழக்கு மன்றில் நீதிபதி டி.எஸ் சூசைதாஸ் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது, எதிரிகளான இருவரையும் மன்று நியாமான சந்தேகங்களுக்கு அப்பால் குற்றவாளிக்காகக் கண்டு இருவருக்கும் மரணதண்டனை விதிக்கப்பட்டது.

"ஜனாதிபதியால் தீர்மானிக்கப்படும் திகதியில் நிர்ணயிக்கப்படும் இடத்தில் குற்றவாளியின் உயிர் பிரியும் வரை தூக்கிலிடுமாறு இந்த மன்று பரிந்துரைக்கின்றது." – என்று நீதிபதி தண்டனைத் தீர்ப்பளித்தார்.

# இல்லாத இனவாதத்தை பேசுவதாலேயே சிக்கல்

## இப்படிக் கூறுகின்றது ஐக்கிய மக்கள் சக்தி




"இலங்கையில் அனைத்து இன மக்களும் நல்லிணக்கத்துடனேயே வாழ்கின்றனர். நாட்டில் இல்லாத இனவாதம் தொடர்பாகக் கதைப்பதுதான் இங்குள்ள பிரச்சினை." – என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

"வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்துக்குச் செல்லும்போது அந்தந்தப் பகுதி மக்களை திருப்திபடுத்தும் வகையில் ஜனாதிபதி கருத்துகளை முன்வைக்கின்றார்.

இது ஏற்புடையது அல்ல. அரசாங்க தலைவர் பொது கொள்கையுடன் பயணிக்க வேண்டும். நாட்டில் எந்த பகுதிக்கு சென்றாலும் ஒரே கொள்கை அடிப்படையிலேயே கருத்துகளை முன்வைக்க வேண்டும். ஆனால் தமிழ் டயஸ்போராக்களை திருப்திப்படுத்தும் விதத்திலேயே வடக்குக்கு சென்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உரையாற்றுகின்றார்.

நாட்டில் அனைத்து இன மக்களும் நல்லிணக்கத்துடன்தான் வாழ்கின்றனர். அதனால் இனவாதத்தை தோற்றுவிக்கும் விதத்தில் கருத்துக்களை எவரும் முன்வைக்ககூடாது.

அநுரகுமார திஸாநாயக்க என்பவர் எதிர்க்கட்சித் தலைவர் அல்லர். அவர் நாட்டின் ஜனாதிபதி. ஆகவே, பொறுப்புடன் கருத்துகளை வெளியிட வேண்டும்." – என்றார்.

# 821 கிலோ ஹெரோய்ன் கடந்த வருடத்தில் மீட்பு




நாடளாவிய ரீதியில் கடந்த வருடம் 821 கிலோ ஹெரோய்ன் போதைப் பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் வுட்லர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"2025ஆம் ஆண்டில் நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகள் மற்றும் தேடுதல்களில் 821 கிலோ ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்துடன், 17 ஆயிரத்து 189 கிலோ கஞ்சாவும், 3 ஆயிரத்து 865 கிலோ ஐஸ் போதைப்பொருளும், 40 லட்சம் போதை மாத்திரைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. இவற்றில் 495 கிலோ ஹெரோய்ன் போதைப்பொருள் அழிக்கப்பட்டுள்ளது. இந்த வருடத்தில் இதுவரை 171 கிலோ போதைப்பொருள் அழிக்கப்பட் டுள்ளது." – என்றார்.




# மலையக மக்களுக்கான காணி உரிமைக்காக ஜி.எஸ்.பி. வரி ஆயுதத்தைக் கையிலெடுங்கள்!

## பிரான்ஸ் தூதுவரிடம் மனோ கோரிக்கை

மலையக மக்களுக்கான காணி உரிமையை, ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை நிபந்தனையாக வைக்க பிரான்ஸ் முன்வர வேண்டும் என்று அந்நாட்டுத் தூதுவரிடம் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மனோ எம்.பி. தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி பிரதிநிதிக் குழு, கொழும்பில் உள்ள பிரான்ஸ் தூதுவர் ரெமி லாம்பெர்ட்டை சந்தித்துப் பேச்சு நடத்தியது.

கொழும்பில் உள்ள மனோ கணேசன் எம்.பியின் இல்லத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், த.மு.கூ. பிரமுகர்கள், பேராசிரியர் விஜயசந்திரன், பாரத் அருள் சாமி, புஷ்பநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இது தொடர்பில் மனோ எம்.பி. தன் எக்ஸ் தளத்தில் வெளியிட்ட அறிக்கையில் பின்வருமாறு கூறியுள்ளார்.

01. எனது இல்லத்தில், இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் ரெமி லாம்பர்டைச் சந்தித்து, டித்வா பேரழிவால் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்களாக இருந்தபோதிலும், மலையக தமிழ் மக்களுக்கு – குறிப்பாக தோட்டத் தொழிலாளர்கள் – அரசின் இலங்கை மீள்கட்டெழுப்பல் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் திட்டமிட்ட முறையில் விலக்கி வைக்கப்படுகிறார்கள் என்பதைத் தூதருக்கு உண்மை ஆதாரங்களுடன் எடுத்துரைத்தோம்.

02. அரசின் உத்தியோகபூர்வ உறுதிமொழிகள் இருந்தபோதிலும், இடம்பெயர்ந்த ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்பட வேண்டிய ரூ. 5 மில்லியன் நிதியுதவியும், காணி ஒதுக்கீடும், பெருந்தோட்ட சமூகத்திற்கு மறுக்கப்பட்டுவருகிறது. இது கவனயீனம் அல்ல. இது திட்டமிட்ட பாகுபாடு ஆகும்.

03. மலையக சமூகத்துக்கே உரிய, இன்னும் தீர்க்கப்படாத அநீதிகள் குறித்து விவாதிக்க, தமிழ் முற்போக்குக் கூட்டணி மற்றும் சிவில் அமைப்புகள் சார்பாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்திக்கப் பல தடவைகள் கோரிய போதும், அந்தக் கோரிக்கைகள் திட்டமிட்ட வகையில் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

04. இந்தப் பாகுபாட்டு நடைமுறைக்கு முற்றுப்புள்ளி வைக்கவும், மலையக இலங்கை மக்களுக்கு சம உரிமை, சம வளங்கள், சம மரியாதை உறுதி செய்யவும், இலங்கை அரசுடன் கூடிய தனது நல்லுறவுகளை, பிரான்ஸ் பயன்படுத்த வேண்டும் என வலியுறுத்தினோம்.

05. மேலும், முன்னணி ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடாகிய பிரான்ஸ், மலையக தமிழ்ச் சமூகத்தின் காணி, வீட்டு உரிமைகள், இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியத்தால், வழங்கப்படும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகைகளுக்கான நிபந்தனைகளாக முன்வைக்கப்பட வேண்டும் என வலியுறுத்த வேண்டும் என்றும் நாம் கோரிக்கை விடுத்தோம்.





# கலாமித்ரா விருது விழாவில் தமிழகப் பிரமுகர்கள்

புதிய அலை கலை வட்டம் கொழும்பில் வருடாந்தம் நடத்தும் கலாமித்ரா விருது விழாவில் தமிழகத்தைச் சேர்ந்த இரு முக்கியஸ்தர்கள் கௌரவ விருந்தினர்களாகப் பங்கேற்கின்றனர்.

பால பாக்கிய குறுப்பின் தலைவர் தொழில் அதிபர் டாக்டர் பி.ஆறுமுக பாண்டியன் மற்றும் திருநெல்வேலி, நாகர்கோவில் சூரியா வைத்தியாலைகளின் பிரதேச இயக்குநர் பி.கே.சரவணன் ஆகியோர் பங்கேற்கின்றனர்.



# கல்விச் சீர்திருத்தச் சிக்கலை தீர்க்கும் நடவடிக்கை துரிதம்

## அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

புதிய கல்விச் சீர்திருத்தங்களில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைத் தீர்த்து மாணவர்களுக்குச் சிறந்த கல்வியை வழங்கும் நடவடிக்கைகள் துரிதப்படுத்துள்ளன என்று சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு அமைச்சர் தெரிவித்ததாவது –

“கல்வி சீர்திருத்தங்கள் நீண்ட காலமாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதனால் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த எமது அரசாங்கத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தரம் 6 பாடநூலில் ஏற்பட்ட ஒரு சிறு தவறால் அதை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. எனினும் அந்த தவறுகள் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

எதிர்க்கட்சிகள் கூறுவதைப் போன்று வேறு எந்தவொரு தவறான விடயங்களும் பாடநூலில் உள்ளடக்கப்படவில்லை. அதை நன்கு அறிந்த தரப்பினரால் இந்த சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதியிடம் கடிதம் மூலமும் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

தவறுகள் காணப்படுமாயின் அவற்றை திருத்திக் கொண்டு கல்வி சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த நாம் தயாராகவுள்ளோம்.” – என்றார்.



# மாற்றுத்திறனாளியைமோதிவிட்டு தப்பிச் சென்ற பட்டாரக வாகனம்!

**(மரியசீலன் திலைக்ஸ்)**

பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இயக்கச்சி பகுதியில் இன்று முற்பகல் 11 மணியளவில் விபத்துச் சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

இயக்கச்சி பகுதியில் இருந்து இயக்கச்சி சந்திநோக்கி பயணித்த மாற்றுத் திறனாளி ஒருவரின் மோட்டார் சைக்கிளை கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த பட்டாரக வாகனம் பின்னால் வந்து மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளது. விபத்தில் தலையில் பலத்த காயமடைந்த இயக்கச்சிப் பகுதியை சேர்ந்த நபர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த பளை போக்குவரத்து பொலிஸார் விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் விபத்தை ஏற்படுத்திவிட்டு தப்பிச்சென்ற வாகனத்தை அருகில் உள்ள சிசிடிவி கேமரா மூலம் அடையாளம் காண முயற்சித்து வருகின்றனர்.

# பாடசாலை மாணவி பாலியல் துஷ்பிரயோகம் சந்தேகத்தில் மூன்று இளைஞர்கள் மறியலில்!

**(க.கிஷாந்தன்)**

கினிகத்தேன பகுதியில் அமைந்துள்ள பிரதான பாடசாலை ஒன்றில் 11 ஆம் வகுப்பில் கல்வி பயிலும் பாடசாலை மாணவி ஒருவரை பல தடவைகள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்ட மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மாணவி, கினிகத்தேன – கோணவல பகுதியைச் சேர்ந்த இளைஞரொருவருடன் காதல் தொடர்பில் இருந்ததாகவும், அவரை சந்திக்கச் சென்ற சந்தர்ப்பங்களில் அவர் தனது நண்பரின் வீட்டுக்கு அழைத்துச் சென்றதாகவும், அங்கு காதலனும் அவரது நண்பனும் இணைந்து தன்னை பாலியல் துஷ்பிரயோகம் செய்தனர் என்றும் பொலிஸ் நிலையத்தில் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

இந்த மாணவி தனது பாட்டியின் பாதுகாப்பில் வசித்து வருகிறார். கடந்த 17 ஆம் திகதி காலை வீட்டைவிட்டு வெளியேறி இரவு தாமதமாக வீடு திரும்பியதைத் தொடர்ந்து சந்தேகமடைந்த பாட்டி கினிகத்தேன பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததுள்ளார்.

அந்தப் முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், மாணவி பல தடவைகள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளானது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதனைத் தொடர்ந்து, மேலதிக வைத்திய பரிசோதனைக்காக மாணவி நாவலப்பிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களும் 16, 17 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும், அவர்கள் 19 ஆம் திகதி ஹட்டன் நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணைகளை மேற்கொண்ட ஹட்டன் மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தின் நீதிவான் பீட்டர் போல் பெப்ரவரி 2 ஆம் திகதிவரை அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

# நெல் சந்தைப்படுத்தல் சபையினூடான நெற்கொள்வனவைத் துரிதப்படுத்துக!

## ரவிகரன் எம்.பி. வலியுறுத்து



**(விஜயரத்தினம் சரவணன்)**

வன்னிப் பிராந்தியம் உட்பட வடக்கு, கிழக்கின் ஏனைய பாகங்களிலும் பெரும் போக நெல் அறுவடை ஆரம்பித்துள்ள நிலையில், நெல் சந்தைப்படுத்தல் சபையினூடாக விவசாயிகளிடமிருந்து நெற்கொள்வனவை மேற்கொள்ளுமாறும் அதற்கான நடவடிக்கையை முன்னெடுக்குமாறும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றில் இன்று உரையாற்றும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

விரைந்து நெல்சந்தைப்படுத்தல் சபையின் ஊடாக விவசாயிகளிடம் நெற்கொள்வனவை மேற்கொள்வதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

குறிப்பாக முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் உள்ளிட்ட வன்னிப் பிராந்தியத்திலும் வடக்கு, கிழக்கின் ஏனைய பாகங்களிலும் 2025 - 2026 ஆம் ஆண்டுகளுக்கு உரிய பெரும்போக நெற்செய்கையின் அறுவடை தொடங்கியுள்ளது.

இந்த நிலையில் அரசால் உரிய காலத்தில் நெல்லுக்கான நிர்ணய விலை அறிவிக்கப்பட்டுள்ளது. எமது விவசாயிகள் சார்பாக எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேவேளை உரிய காலத்தில் நெல் சந்தைப்படுத்தல் சபையினூடாக விவசாயிகளிடமிருந்து நெல்லினை கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொள்ளவேண்டும். நெற்கொள்வனவிலும் தாமதம் ஏற்பட்டால் விவசாயிகள் தனியார் நெல் கொள்வனவாளர்களிடமும், இடைத் தரகர்களிடமும் நெல்லைக் குறைந்த விலைக்கு வழங்கி நட்டமடையும் நிலை ஏற்படும்.

வன்னி உட்பட வடக்கு, கிழக்கிலுள்ள விவசாயிகள் இம்முறை வெள்ள அனர்த்தத்தினாலும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றனர்.

எனவே விவசாயிகளிடமிருந்து நெற்கொள்வனவை உரிய காலத்தில் நெல் சந்தைப்படுத்தல் சபையின் ஊடாக விரைந்து முன்னெடுக்குமாறு கோருகின்றேன். - என்றார்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மருத்துவர்கள் போராட்டம்

அரச மருத்துவர்கள் அடிக்கடி வேலை நிறுத்தம், தொழிற்சங்கப் போராட்டம் என்று மிரட்டல் அறிவிப்புகளையும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வரும் நிலையில் நாட்டின் சுகாதாரத்துறை செயற்பாடுகள் 'நித்திய கண்டம், பூரண ஆயுசு' என்றரீதியில் தொடர்கின்றன.

இப்போதும் வரும் வெள்ளிக்கிழமை 23ஆம் திகதி தொடக்கம் நாடளாவிய ரீதியில் தொடர்ச்சியான தொழிற்சங்க நடவடிக்கைகளை ஆரம்பிக்க உள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

அரச வைத்தியர்களையும் சுகாதாரத் துறையையும் பாதிக்கும் முக்கிய பிரச்சினைகளைக் கண்டுகொள்ள 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் தவறியுள்ள நிலையில், அது, மருத்துவ சமூகத்துக்குள் மோசமான திருப்தியின்மைக்கு வழிவகுத்துள்ளதாக மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பேச்சாளர் சமில் விஜேசிங்க தெரிவித்திருக்கின்றார்.

இவ்விடயத்தை ஒட்டி, ஜனாதிபதி மற்றும் சுகாதார அமைச்சருடனான தங்களின் கலந்துரையாடல்களைத் தொடர்ந்து, ஏற்கனவே முன்மொழியப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதாகவும், ஆனால் தொடர்ந்த கலந்துரையாடல்கள் நடைபெறவில்லையென்றும், எட்டப்பட்ட இணக்கப்பாடுகள் பூர்த்தி செய்யப்படவில்லையென்றும் விஜேசிங்க குறிப்பிட்டுள்ளார்.

பயனுள்ள தீர்வுகள் வழங்கப்படாவிட்டால் வேலை நிறுத்தம் தொடருமென அரச மருத்துவர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

இதற்கிடையில் -

அக்கரைப்பற்று ஆதார மருத்துவமனையில் நிலவும் நிர்வாகச் சிக்கல்களுக்கு உரிய தீர்வு காணப்படாததைக் கண்டித்து, இன்று காலை 08.00 மணி முதல் கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் மீண்டும் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்க அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று ஆதார மருத்துவமனையின் மருத்துவப் பொறுப்பதிகாரியின் செயற்பாடுகளுக்கு எதிராகக் கிளர்ந்துள்ள மருத்துவர்கள், கடந்த வாரம் இதே கோரிக்கைகளை முன்வைத்து ஆரம்பித்த போராட்டத்தை, தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தற்காலிகமாக இடைநிறுத்தியிருந்தனர். இருப்பினும், இடைநிறுத்தப்பட்ட அந்த காலப்பகுதிக்குள் சுகாதார அமைச்சு இந்த விவகாரத்தில் ஆக்கப்பூர்வமான தீர்வை வழங்கத் தவறியதன் காரணமாகவே, மீண்டும் வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்க நேரிட்டுள்ளதாக அந்தச் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்தினால் கிழக்கு மாகாணத்திலுள்ள மருத்துவமனைகளின் வெளிநோயாளர் பிரிவு மற்றும் கிளினிக் சேவைகள் உள்ளிட்ட அன்றாடப் பணிகள் பாதிக்கப்படக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டது.

நாட்டின் சுகாதாரத்துறை எப்போது சுமுகமாக இயங்குமோ ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். மூக்கு இருக்கும் வரை சளி இருக்கும் என்பது போல அரச மருத்துவர்களுக்கு சங்கம் இருக்கும் வரை சுகாதாரத்துறை வேலைநிறுத் தங்களும் நீடிக்கும் போல....!






# பொத்துவிலில் இரத்ததான நிகழ்வு!

(ஏ.எஸ்.எம்.அர்ஹம்)

Lanka Tamil FM/ Tஏ யின் ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு, இரத்த தானம் வழங்குவோர் ஒன்றியத்துடன் இணைந்து பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் மாபெரும் இரத்ததான நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். அப்துல் வாசித் கலந்து கொண்டார்.

விசேட அதிதியாக பொத்துவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் உவைஸ் பாறுக் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் பொலிஸ் பிரிவினர், சமூக அமைப்புகள், சமூக நலன் விரும்பிகள் மற்றும் பொதுமக்கள் என பலரும் ஆர்வமுடன் கலந்து கொண்டு இரத்ததான நிகழ்வுக்கு முழுமையான ஒத்துழைப்புகளை வழங்கினர்.

இரத்ததானம் வழங்கியவர்களுக்கு டுயமெய வுயஅடை வானொலியினால் சான்றிதழும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.



# தமிழகத்தில் பரிசு பெற்ற இலங்கை மாணவி!



(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

தமிழக அரசின் ஏற்பாட்டில் சென்னையில் நடை பெற்ற இரு நாள் அயலக தமிழர் தினம் மாநாட்டை முன்னிட்டு உலகலாவிய ரீதியில் நடத்தப்பட்ட சர்வ தேச கதை சொல்லும் போட்டியில் இரண்டாம் இடத்தை இலங்கையின் திருகோணமாலை கிண்ணியா மகளிர் கல்லூரியின் 8 வயது மாணவி முஹ்ஸின் ஆயிஷா ஸஹ்ரின் பெற்றுக்கொண்டார்.

அவருக்கான விருதையும் பணப் பரிசலையும் தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சென்னை வர்த்தக மைய மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற அயலக தமிழர் தினத்தின் ஆரம்ப விழாவில் போது வழங்கினார்.

இதின்போது தமிழக சிறுபான்மை நலன் மற்றும் புலம் பெயர் தமிழர் நலன் அமைச்சர் ச.மு. நாசர் மற்றும் இலங்கையின் நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ராதகிருஷ்ணன் உள்ளிட்டவர்களும் பிரசன்னமாகியிருந்தனர்.




# உயர்தரக் கல்வியை எமது சமூகம் இலகுவாகப் பெற இந்தியப் பல்கலைக்கழகங்கள் திட்டம் முன்னெடுப்பு!

## வடக்கு ஆளுநர் வேதநாயகன் சுட்டிக்காடு

இந்தியப் பல்கலைக்கழகங்கள் உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட பட்டங்களை, பெரும்பாலான மேற்குலக நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களின் செலவில் நான்கில் ஒரு பங்கு செலவிலேயே வழங்குகின்றன. இது உயர்தரக் கல்வியை எமது சமூகம் இலகுவாகப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக மாற்றுகின்றது.

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் சுட்டிக்காட்டினார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் அனுசரணையில், சிகரம் அக்கடமி மற்றும் சேப் (ஏயூீநு) நிறுவனம் இணைந்து நடத்திய 'இந்தியாவில் கல்வி' (Study in India) கல்வி வழிகாட்டல் கண்காட்சி யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் நேற்று திங்கட் கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்ட ஆளுநர் கண்காட்சியைப் பார்வையிட்ட பின்னர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது,

இந்த நிகழ்வானது ஒரு சாதாரணக் கண்காட்சி மட்டுமல்ல. இது எமது இளைஞர்கள் உலகத்தரம் வாய்ந்த கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு நுழைவாயில். அத்தோடு, இது வலுவடைந்து வரும் 'இந்தியா - இலங்கை அறிவுசார் பங்காண்மையின்' ஒரு சான்றாகவும் திகழ்கின்றது.

இந்தியா இன்று உலகின் இரண்டாவது மிகப்பெரிய கல்வி மையமாகத் திகழ்கின்றது. அங்கு ஏறத்தாழ 1,300 பல்கலைக்கழகங்களும் 75,000 கல்லூரிகளும் உள்ளன. இங்குள்ள யாழ்ப்பாண மாணவர்களுக்கு, முதன்மையான கல்வி





நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்திப்பதற்கான ஓர் அரிய வாய்ப்பை இந்தக் கண்காட்சி வழங்குகின்றது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் 2,500 ஆண்டுகளுக்கும் மேலான கலாசார மற்றும் வரலாற்றுத் தொடர்புகள் உள்ளன. யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும் ஒரு மாணவருக்கு, இந்தியாவில் கல்வி கற்பது அதிகபட்ச கலாசார இணக்கப்பாட்டையும், ஒரு இணக்கமான சூழலையும் வழங்குகின்றது.

எமது பிராந்தியம் ஏற்கனவே வலுவான பழைய மாணவர் தடம் ஒன்றைக் கொண்டுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் இராமநாதன் நுண்கலைக் கல்லூரி ஆகியவற்றின் பல விரிவுரையாளர்கள், இந்தியாவில் தமது பயிற்சியைப் பெற்ற பெருமைமிக்க ஐ.சி.சி.ஆர். புலமைப்பரிசில் பெற்றவர்கள்.

இந்திய அரசு இலங்கை மாணவர்களுக்காக ஆண்டுதோறும் ஏறத்தாழ 800 புலமைப்பரிசில்களை வழங்குகின்றது. இவை இளங்கலை, முதுகலை மற்றும் செவ்வியல் இசை, நடனம் போன்றவிசேடதுறைசார் பயிற்சிகளையும் உள்ளடக்கியுள்ளன.

இந்தக் கண்காட்சியானது 'நம்பிக்கையின் புதிய பாலமாக அறிவு' அமையப் பெறுவதற்கான ஒரு மேடையாகும். இந்தியாவில் கல்வி கற்கத் தெரிவு செய்வதன் மூலம், எமது மாணவர்கள் வெறும் பட்டத்தை மட்டும் பெறவில்லை. அவர்கள் எமது முழுப் பிராந்தியத்தின் எதிர்காலத்தையும் முன்னெடுத்துச் செல்லும் கருத்துக்கள் மற்றும் புத்தாக்கங்களின் இருவழிப் பரிமாற்றத்தில் பங்குகொள்கின்றனர்.

ஒன்றாக இணைந்து, பாக் நீரிணையை ஒரு 'அறிவுசார் நீரிணையாக' மாற்றுவோம். பகிரப்பட்ட கற்றல் மற்றும் வளர்ச்சியின் ஊடாக எமது சிறந்த அறிவாளிகள் அங்கு வளம் பெறட்டும்.- என்றார்.

இந்தியாவின் தலைசிறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகள் ஒரே கூரையின் கீழ் அணிதிரண்டிருந்தன.

இந்த நிகழ்வில் இந்தியத் துணைத்தூதர் சாய் முரளி, இந்தியத் தூதரக அதிகாரிகளும், இந்தியப் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளின் பிரதிநிதிகள், மாணவர்கள், பெற்றோர் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.





# திகாமடுல்ல மீடியா போரத்தின் புதுவருட ஒன்று கூடல் நிகழ்வு

திகாமடுல்ல மீடியா போரத்தின் புதுவருட ஒன்று கூடலும் அங்கத்தவர்களுக்கு, பரிசுப் பொருள்கள் வழங்கும் நிகழ்வும், ஒலுவில் வில்லாஹ் ஹோட்டலில் இடம்பெற்றது.



திகாமடுல்ல மீடியா போரத்தின் தலைவரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான எம்.எப். றிபாஸ் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் முதன்மை அதிதிகளாக அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினரும், தொழிலதிபருமான அப்துல் வாஸீத், சிரேஷ்ட ஒலி, ஒளி பரப்பாளர் சட்டத்தரணி ஏ.எம். தாஜ் உட்பட போரத்தில் புதிதாக இணைந்து கொண்ட வானொலி, தொலைக்காட்சி (இலத்திரனியல்) ஊடக நிறுவனங்களதும், பிராந்திய, ஓய்வு நிலை மூத்த ஊடகவியலாளர்கள் என பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர்.














# பொற்பதி மக்கள் நலன்புரி சங்க 7 ஆம் ஆண்டு நிறைவு விழா!

(பூ.லின்ரன்)

வடமராட்சி, பொற்பதி மக்கள் நலன்புரி சங்கத்தின் 7 ஆம் ஆண்டு நிறைவு விழா அதன் தலைவர் சிவலிங்கம் சிறிகலாதான் தலைமையில் அதன் தலைமை பொற்பதி, குடத்தனையில் இடம்பெற்றது.

இதில் முதல் நிகழ்வாக விருந்தினர்கள் மலர்மாலை அணிவிக்கபட்டு வரவேற்கப்பட்டதை தொடர்ந்து மங்கல சுடர்களை ஜனநாயக போராளிகள் கட்சி தலைவர் சி. வேந்தன், முன்னாள் பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் ஆ. சுரேஷ்குமார், மக்கள் நலன்புரி சங்க இயக்குனர் எஸ்.கே. சந்துரு, பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர்களான ஆகஸ்ரின், திருமதி சுரேஷ்குமார், பருத்தித்துறை நகர சபை உறுப்பினர் ஜெயகாந்தன் ஜெயகோபி, உட்பட பலரும் ஏற்றினர்.

வரவேற்புரை இடம்பெற்றதைத் தொடர்ந்து கற்கோவளம் முன்பள்ளி மாணவர்களின் வரவேற்பு நடனம் இடம் பெற்றது. அதனை தொடர்ந்து தலைமையுரையைப் பொற்பதி மக்கள் நலன் புரி சங்கத்தின் தலைவர் சிவலிங்கம் சிறிகலாதன் நிகழ்த்தினார்.

அதனை தொடர்ந்து விஜய் ரிவி யூனியர் பாடல் போட்டிக்கு தெரிவாகிய கற்கோவளம் சிறுமி அனுஷ்காவின் பாடல்கள் இடம்பெற்றன. அதனை தொடர்ந்து கல்வி சாதனையாளர்களான செல்வன் ம.கர்சன், செல்வன் அ. ஜனார்த்தன், செல்வி ம. சாருஷா, ஆகியோர் க.பொ.த. உயர்தரத்தில் சித்தி யெய்தியமைக்காகக் கௌரவிக்கப்பட்டனர். தரம் 5 புலமை பரிசில் பரீட்சையில் 142 புள்ளிகளை பெற்ற அ. அதிசயனும் கௌரவிக்கபட்டனர்.

வாழ்த்துரைகளை ஜனநாயக போராளிகள் கட்சி தலைவர் சி. வேந்தன், முன்னாள் பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் ஆ. சுரேஷ்குமார், எஸ்.கே.சந்துரு, பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் ஆகஸ்ரின் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச சபை, நகரசபை உறுப்பினர்கள், சங்க நிர்வாகிகள், நலன்விரும்பிகள், மக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.





# விரிவுரையாளர் அன்சார் மௌலானாவுக்கு மட்டு. கல்வியல் கல்லூரியில் கௌரவம்

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

அம்பாறை மாவட்டத்தின் மருதமுனை பிரதேசத்தைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளரும் மருதமுனை ஜம்இய்யதுல் உலமா சபையின் தலைவருமான அஷ்ஷெய்க் எப்.எம்.எஸ்.ஏ. அன்ஸார் மௌலானா, கடந்த டிசெம்பர் மாதம் கல்விப் பணியிலிருந்து ஓய்வு பெற்றதை முன்னிட்டு இறுதியாக விரிவுரையாளராக கடமையாற்றிய மட்டக்களப்பு தேசிய கல்வியற் கல்லூரியில் கௌரவம் வழங்கப்பட்டது.

மட்டக்களப்பு தேசிய கல்வியல் கல்லூரியின் பீடாதிபதி த. கணேசரெத்தினத்தின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்




வில், அஷ்செய்க் எப்.எம்.எஸ். அஹமது அன்ஸார் மௌலானாவின் கல்வித் துறை, சமூக சேவைகள் பற்றி விரிவுரையாளர்கள் இங்கு உரையாற்றியதுடன் பயிலுனர் மாணவர்களும் பல்வேறு நிகழ்வுகளை ஒழுங்கு செய்திருந்தனர்.

இதேவேளை மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரியின் விரிவுரையாளர்கள் மற்றும் அங்கு கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் ஒன்றிணைந்து மௌலானாவுக்குப் பொன்னாடை போர்த்தி, வாழ்த்துப்பா வாசித்து பொற்கிளியும் வழங்கிக் கௌரவித்தனர். சேவை நலனை நினைவு கூர்ந்து விரிவுரையாளர்கள் பலரும் தமது அனுபவக் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர். இந்த நிகழ்வில் கல்வியற் கல்லூரியின் உப பீடாதிபதி, இணைப்பாளர்கள், விரிவுரையாளர்கள், உத்தியோகத்தர்கள், மௌலானாவின் குடும்பத்தினர் என பலரும் கலந்து கொண்டனர்.





# புதுக்குடியிருப்பில் முதன்முறையாக இடம்பெற்றுள்ள பட்டத் திருவிழா!

(பா.சதீசன்)

புதுக்குடியிருப்பு குயின் பூங்காவில், பட்டப்போட்டி, சுவையான உணவுகள், பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகளுடன் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் பட்ட போட்டி, மனைவியை கதிரையில் ஏற்றல், கண் கட்டி கணவன் மனைவிக்கு வாழைப் பழம் தீர்த்துதல், ஊசிநூல் கோர்த்தல், முட்டி உடைத்தல், கயிறு இழுத்தல், பலூன் உடைத்தல், சாக்கோட்டம், மா ஊதி காசெடுத்தல், நீர் நிரப்புதல் என பல நிகழ்வுகள் இடம்பெற்று வெற்றி யீட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங் கப்பட்டன.

குறித்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாம கேஸ்வரன், புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் வே. கரிகாலன், சட்ட தரணி எஸ்.தனஞ்சயன், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரதீஸ்வரன், புதுக்குடியிருப்பு வர்த்தக சங்க தலைவர் த. நவநீதன், வடக்கு கிழக்கு பொருளாதார நிலையத்தின் பணிப்பாளர் பிரதீபன், கமநல சேவை நிலையத்தின் ஒய்வுபெற்ற உதவி ஆணையாளர் தி.அமிர்தலிங்கம், வடக்கு தொழில்துறை மன்றத்தின் தலைவர் டிலான், புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய உப பொறுப்பதிகாரி , குயின் பூங்காவின் இயக்குனர் சுபாஷ், குயின் பூங்கா பணியாளர்கள், சமூக ஆர்வலர்கள், சிறுவர்கள், இளைஞர்கள் ஆயிரக்கணக்கான மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.









# வடக்கு முதலீட்டு மாநாட்டின் முன்னிரவில்!



- யாழ்ப்பாணத்திலிருந்து
ராஜ் சிவநாதன் -

வடக்கு முதலீட்டு மாநாட்டிற்கு ஒரு நாள் முன், மிகுந்த நம்பிக்கையுடனும் பொறுப்புணர்வுடனும் யாழ்ப்பாணத்திலிருந்து இவ்வுரை எழுதுகிறேன். Well Wishers of Sri Lanka இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மாநாட்டின் அதிகாரப்பூர்வ ஆதரவாளராக இருப்பதில் பெருமை கொள்கிறது. வட மாகாணத்தில் இதுவரை நடைபெற்ற முதலீட்டு மற்றும் அபிவிருத்தி நிகழ்வுகளில், இது மிகவும் முக்கியமானதும் தாக்கம் கொண்டதுமான ஒரு மேடையாக உருவெடுத்து வருகிறது.

யாழ்ப்பாணத்தில் தற்போது காணப்படும் சூழ்நிலை உண்மையிலேயே உற்சாகமூட்டுவதாக உள்ளது. மாநாட்டைச் சுற்றியுள்ள ஆற்றல் தெளிவாக உணரக்கூடியதாக உள்ளது. பங்குதாரர்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பு பாராட்டத்தக்கதாக இருக்கிறது. TMC யாழ்ப்பாணம் மற்றும் TMC கொழும்பு கிளைகளின் உறுப்பினர்கள் தங்களது அனுபவம், தொடர்பு வலையமைப்பு மற்றும் அமைப்புத் திறன்களை ஒன்றிணைத்து, இந்த மாநாட்டை மிக உயர்ந்த தொழில்முறை தரத்தில் நடத்தத் தீவிரமாக செயல்பட்டு வருகின்றனர். வடபகுதியை நம்பகமானதும் முதலீட்டிற்கு ஏற்றதுமான பிரதேசமாக நிலைநிறுத்த வேண்டும் என்ற ஒரே நோக்கத்தை இந்த கூட்டு முயற்சி வெளிப்படுத்துகிறது.

இந்த மாநாட்டில் நூற்றுக்கும் மேற்பட்ட முதலீட்டாளர், பிரதிநிதிகள் பங்கேற்கவுள்ளனர். அதோடு மூத்த அரச அதிகாரிகள், துணை அமைச்சர்கள், அமைச்சர்கள் மற்றும் அமைச்சு செயலாளர்களும் கலந்து கொள்ள உள்ளனர். நீதியும் நல்லிணக்கமும் தொடர்பான அமைச்சர் ஹர்ஷன நாணயக்கர அவர் களின் பங்கேற்பு, இந்த முயற்சிக்கு தேசிய அளவில் வழங்கப்படும் முக்கியத்துவத்தையும், உள்ளடக்கிய வளர்ச்சி, நல்லிணக்கம் மற்றும் பிராந்திய அபிவிருத்தி குறித்த அரசின் பரந்த கொள்கைகளுடன் இது ஒத்திசைவாக இருப்பதையும் வலியுறுத்துகிறது.

### வடக்கு முதலீட்டு மாநாட்டின் முக்கியத்துவம்

வடக்கு முதலீட்டு மாநாடு ஒரு நிகழ்வாக மட்டுமல்ல. இது வட மாகாணத்தின் பொருளாதார கதையையே மாற்றும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படும் ஒரு மூலோபாயத் தலையீடாகும்.இதன் முக்கிய அம்சங்கள் கவனிக்கத் தக்ஜவை.

### முதலீட்டாளர் நம்பிக்கை மற்றும் வெளிப்பாடு

உள்ளூர் மற்றும் சர்வதேச முதலீட்டாளர்கள் அரசின் தீர்மானக்காரர்கள், பிராந்திய அதிகாரிகள் மற்றும் திட்ட முன்மொழிவாளர்களுடன் நேரடியாக கலந்துரையாடக்கூடிய நம்பகமான மேடையை இந்த மாநாடு வழங்குகிறது. இந்த வெளிப்படைத் தன்மை முதலீட்டாளர் நம்பிக்கையை அதிகரித்து, முதலீட்டு முடிவுகளை விரைவுபடுத்துகிறது.

### கொள்கை, தனியார் முதலீட்டுக்கிடையிலான பாலம்

அமைச்சர்கள், செயலாளர்கள் மற்றும் மூத்த அதிகாரிகள் நேரடியாக முதலீட்டாளர்களுடன் கலந்துரையாடுவதன் மூலம், நிர்வாகத் தடைகள் குறைகின்றன. ஒழுங்குமுறை நடைமுறைகள், அனுமதிகள் மற்றும் ஊக்கத்திட்டங்கள் தெளிவு படுத்தப்படுகின்றன.




### பிராந்திய பொருளாதார சமநிலை

வட மாகாணம் நீண்ட காலமாக பெரிய முதலீட்டு ஓட்டங்களில் பின்தங்கியிருந்தது. இந்த மாநாடு உட்கட்டமைப்பு, சுற்றுலா, புதுப்பிக்கத்தக்க ஆற்றல், விவசாய தொழில், தளவாடம், கல்வி மற்றும் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் வங்கிக்குத் தகுந்த முதலீட்டு திட்டங்களை வெளிப்படுத்தி, அந்த சமநிலையற்ற நிலையைச் சரிசெய்கிறது.

### புலம்பெயர் தமிழர் பங்கேற்பு

உணர்ச்சி சார்ந்த ஈடுபாட்டைத் தாண்டி, வேலை வாய்ப்புகள், திறன் பரிமாற்றம் மற்றும் நீண்டகால பொருளாதார மதிப்பை உருவாக்கும் பொறுப்பான முதலீடுகளுக்குள் புலம்பெயர் சமூகத்தை இந்த மாநாடு வழிநடத்துகிறது.

### இளைஞர் மற்றும் தொழில்முனைவு வளர்ச்சி

MSMEகள், தொடக்க நிறுவனங்கள் மற்றும் புதுமை சார்ந்த வளர்ச்சியை முன்னிலைப்படுத்துவதன் மூலம், வடபகுதியின் எதிர்காலம் சார்பு நிலையை அல்ல, தொழில்முனைவு, திறன் மற்றும் நிலைத்த நிறுவனங்களை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும் என்ற தெளிவான செய்தியை இந்த மாநாடு வழங்குகிறது.

யாழ்ப்பாணத்தின் வானிலை அழகாக உள்ளது. அமைப்புக் குழுக்கள் இடைவிடாது உழைத்து வருகின்றன. பங்கேற்பாளர்களை வரவேற்க நகரம் முழுமையாக தயாராக உள்ளது. இங்கு காணப்படும் கூட்டு உறுதி, வட மாகாணம் தேசிய மற்றும் உலக பொருளாதாரத்துடன் நம்பிக்கையுடனும் தொழில்முறையுடனும் இணைவதற்கு தயாராக இருப்பதை வெளிப்படுத்துகிறது.

நாளை இன்னும் பங்கேற்க விரும்புவோர் அல்லது தொடர்பு கொள்ள விரும்புவோர் உடனடியாக அமைப்புக் குழுவை அணுகலாம். கடைசி நேரப் பதிவு அல்லது பங்கேற்பு வாய்ப்புகள் இன்னும் இருக்கலாம்.

இந்த மாநாடு ஒரு நிகழ்வாக மட்டுமல்ல. இது வடபகுதியின் வரலாற்றில் ஒரு திருப்புமுனை.

**ராஜ் சிவநாதன்**
Well Wishers of Sri Lanka
பெருமைமிக்க ஆதரவாளர் - வடக்கு முதலீட்டு மாநாடு.


வடக்கு முதலீட்டு மாநாடு 2026
வளர்ச்சி மேம்பாடு, ஆழ்ந்த புத்தாக்க முயற்சிகள்
மாநாடு பற்றிய ஒரு பார்வை
ஜனவரி 21 & 22, 2026
திருவள்ளுவர் கலாச்சார மையம்,
யாழ்ப்பாணம், இலங்கை
வடக்கு முதலீட்டு மாநாடானது உலகளாவிய மற்றும் உள்ளூர் முதலீட்டாளர்கள், வெளிநாட்டு வாழ் இலங்கை பிரஜைகள், தேசிய மற்றும் பிராந்திய அரசு நிறுவனங்கள், பெருநிறுவனங்கள், சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மற்றும் இளைஞர்களை இணைக்கும் ஒரு முக்கியமான நிகழ்வாகும். இரண்டு நாட்கள் நடைபெறும் இந்த மாநாடு வட மாகாணத்தின் எதிர்காலத்தை உருவாக்கும் வகையில் முக்கிய முதலீட்டு வாய்ப்புகள், துறைகளின் வளர்ச்சி திறன், முக்கிய அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் கூட்டாண்மைகளை வெளிப்படுத்தவுள்ளது.
சிறப்பம்சங்கள்
ஆரம்ப நிகழ்வுகள் மற்றும் முக்கிய உரைகள்
துறைசார் அறிமுகங்கள் மற்றும் தொழில்நுட்ப அமர்வுகள்
முதலீட்டாளர் கருத்தரங்கு மற்றும் இணைப்பு நிகழ்வுகள்
வடக்கின் பாரம்பரியத்தை கொண்டாடும் மாலைநேர கலை நிகழ்ச்சிகள்
துறை சார்ந்த முதலீட்டு பார்வை
POWERED BY
TMC
The Management Club
NIS 26
NORTHERN INVESTMENT SUMMIT 2026
JAFFNA, SRI LANKA
21ST, 22ND JANUARY 2026





# டிட்வா தாக்கத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணம்

**(நடராஜா மலர்வேந்தன் - பசறை நிருபர்)**

டிட்வா பேரிடர் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு பசறை கல்வி வலயத்துக்கு உட்பட்ட எல்டெப் தமிழ் வித்தியாலயத்தில் அதிபர் டி.கிங்ஸ்டன் தலைமையில் நடைபெற்றது.

பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கம் திருவள்ளுவர் தமிழ் பள்ளியின் ஆதரவில் பதுளை பிரண்லிஷிப் பவுண்டேஷன் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்தத் திட்டத்தில் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் கற்றல் உபகரணங்களைப் பெற்றுக்கொண்டனர். இந்த நிகழ்வில் ஆசிரியர்கள், பிரண்லிஷிப் அமைப்பின் தலைவர் , செயலாளர் நிர்வாக அங்கத்தவர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# தமிழக சட்டப்பேரவையில் உரையாற்றாமல் ஆளுநர் ஆர்.என். ரவி வெளிநடப்புச் செய்தார்




2026 ஆம் ஆண்டின் முதல் சட்டப் பேரவைக் கூட்டத்தொடர் இன்று காலை தொடங்கியது. ஆளுநர் உரையுடன் கூட்டத்தொடர் தொடங்க வேண்டிய நிலையில், ஆளுநர் ஆர்.என்.ரவி உரையை வாசிக்காமல் வெளிநடப்பு செய்தார்.

தேசிய கீதம் அவமதிக்கப்பட்ட தாகக் கூறி ஆளுநர் ரவி வெளிநடப்பு செய்தார்.

இந்த ஆண்டின் முதல் கூட்டத் தொடர் இது என்பதால், மரபுப்படி ஆளுநர் உரையுடன் அவை தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி ஆளுநரும் அவைக்கு சென்றார்.

அவையில் முதலில் தமிழ்த் தாய் வாழ்த்து இசைக்கப்பட்டது. அதன் பின்னர், ஆளுநர் தனது உரையுடன் அவை நடவடிக்கையை தொடங்கிவைக்கும்படி அவருக்கு சபாநாயகர் அப்பாவு கோரிக்கை விடுத்தார். ஆனால், ஆளுநர் தனது உரையை வாசிக்காமல் அவையில் இருந்து வெளிநடப்பு செய்தார்.

தான் தொடர்ச்சியாக தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியும் அதை ஏற்காதது வருத்தமளிக்கிறது என்று தெரிவித்துவிட்டு ஆளுநர் வெளிநடப்பு செய்தார்.

தொடர்ந்து பேசிய தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின்,

“அரசமைப்பு விதிகளை ஆளுநர் தொடர்ந்து மீறுகிறார். பல மாநிலங்களும் ஆளுநர் உரையுடன் சட்டப் பேரவை முதல் கூட்டத்தொடர் தொடங்கும் மரபை மாற்ற வேண்டும் என்று விரும்புகின்றன. பிற மாநில அரசியல் கட்சிகளுடன் இணைந்து அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.” என்றார்.

தொடர்ந்து ஆளுநர் உரை வாசிக்கப்பட்டதாக அவைக் குறிப்பில் பதிவு செய்ய வழிவகை செய்வதற்கான தீர்மானத்தை முதல்வர் முன்வைத்தார். அதன் மீது குரல் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. பின்னர் அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழக சட்டப்பேரவை ஆண்டு முதல் கூட்டத்தொடரில் இருந்து ஆளுநர் ரவி வெளிநடப்பு செய்வமை இது முதன் முறை அல்ல. முன்னதாக கடந்த 2023 ஆம் ஆண்டு ஆளுநர் ரவி தனது உரையில் அரசு தயாரித்துத் தந்த அறிக்கையில் இடம் பெற்றிருந்த சில வார்த்தைகளைப் புறக்கணித்தார். அவர் கூற மறுத்த மகளிர் முன்னேற்றம், பெரியார், அம்பேத்கர், கலைஞர், மதச்சார்பின்மை போன்ற வார்த்தைகள் அவைக்குறிப்பில் இடம்பெறும் என்று முதல்வர் அறிவித்தார். இதனால் ஆளுநர் ரவி பாதியிலேயே புறப்பட்டுச் சென்றார்.

தொடர்ந்துகடந்த 2024 ஆம்ஆண்டு, தமிழ்த் தாய் வாழ்த்துக்குப் பின்னர் தேசிய கீதம் இசைக்கப்படவில்லை எனக் குற்றஞ்சாட்டி ஆளுநர் தனது உரையை வாசிக்காமலேயே வெளிநடப்பு செய்தார்.

இந்த ஆண்டும், ஆளுநர் தனது உரையை வாசிக்காமல் வெளிநடப்பு செய்துள்ளார்.

# குடியரசு தினத்தை முன்னிட்டு மெரினாவில் முப்படையினரின் அணிவகுப்பு ஒத்திகை




குடியரசு தினத்தை முன்னிட்டு மெரினாவில் முப்படைகளில் முதல் கட்ட அணிவகுப்பு ஒத்திகை நேற்று நடைபெற்றது.

தமிழகத்தில் குடியரசு தின விழா சென்னை மெரினா கடற்கரை காமராஜர் சாலையில் உள்ள உழைப்பாளர் சிலை அருகே நடைபெற உள்ளது. குடியரசு தினத்தன்று முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் ஆளுநர் ஆர்.என்.ரவி தேசியக் கொடியை ஏற்றவுள்ளார்.

தொடர்ந்து அவர் முப்படைகளின் அணிவகுப்பு மரியாதை மற்றும் தமிழக அரசின் பல்வேறு துறை சார்ந்த வாகனங்களின் அணிவகுப்பு மரியாதையையும் ஏற்றுக் கொள்கிறார். இதற்கான முதற்கட்ட அணிவகுப்பு ஒத்திகை நேற்று காலை 7 மணியளவில் உழைப்பாளர் சிலை எதிரே காமராஜர் சாலையில் நடைபெற்றது.

இந்த ஒத்திகை நிகழ்ச்சியில் இராணுவம், கடற்படை, விமானப் படை, பொலிஸ், தேசிய மாணவர் படை, மத்திய தொழில் பாதுகாப்புப் படை, பிற மாநில பொலிஸார் உட்பட பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் முதல் கட்ட அணிவகுப்பு ஒத்திகையில் நேற்று கலந்து கொண்டனர்.

மேலும் பாடசாலை, கல்லூரி மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் மற்றும் ஆடல், பாடல் நிகழ்ச்சிகளும் நடத்தி பார்க்கப்பட்டன. இந்த ஒத்திகையை முன்னிட்டு நேற்று காலை 6 மணிமுதல் நிகழ்ச்சி முடியும் வரை மெரினாவில் காந்தி சிலை முதல் போர் நினைவுச் சின்னம் வரை போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டிருந்தது. அடுத்த கட்ட ஒத்திகை நாளை மற்றும் 23 ஆம் திகதி ஆகிய தினங்களில் இதே இடத்தில் நடைபெற உள்ளது.

# ஐக்கிய அரபு அமீரக ஜனாதிபதி டில்லிக்கு விஜயம் பிரதமர் மோடி நேரில் சென்று வரவேற்றார்



ஐக்கிய அரபு அமீரக ஜனாதிபதி முகமது பின் ஜாயத் அல் நயான் நேற்று இந்திய தலைநகர் டில்லிக்கு விஜயம் செய்தார்.

ஈரான் அரசுக்கு எதிராக அந்த நாட்டு மக்கள் தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இதில் 500 பாதுகாப்பு படை வீரர்கள், 4,500 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். போராட்டக்காரர்களுக்கு ஆதரவாக ஈரான் மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் திடீர் தாக்குதல் நடத்தக்கூடும் என்ற பதற்றம் ஏற்பட்டுள்ளது.

ஏமனில் ஹவுத்தி, பி.எல்.சி, எஸ்.டி.சி ஆகிய 3 குழுக்கள் தனித்தனியாக ஆட்சி நடத்தி வருகின்றன. இதில் ஹவுத்தி குழுவுக்கு ஈரானும், பி.எல்.சி குழுவுக்கு சவூதி அரேபியாவும், எஸ்.டி.சி. குழுவுக்கு ஐக்கிய அரபு அமீரகமும் ஆதரவு அளித்து வருகின்றன.

ஏமனில் எ.ஸ்.டி.சி. குழுவின் கட்டுப்பாட்டில் உள்ள எண்ணெய் வயல்களை ஐக்கிய அரபு அமீரக நிறுவனங்கள் நிர்வகித்து வருகின்றன. இந்த எண்ணெய் வயல்கள் மீது சவூதி போர் விமானங்கள் அண்மையில் தாக்குதல் நடத்தின. இதன் காரணமாக இதுவரை நட்பு நாடுகளாக இருந்த ஐக்கிய அரபு அமீரகம், சவூதி அரேபியா இடையே மிகப்பெரிய மோதல் ஏற்பட்டிருக்கிறது.

இந்த சூழலில் ஐக்கிய அரபு அமீரக ஜனாதிபதி முகமது பின் ஜாயத் அல் நயான் நேற்று டில்லி வருகை வந்தார். அவரை, பிரதமர் மோடி விமான நிலையத்துக்கு நேரில் சென்று வரவேற்றார்.

இது தொடர்பாக பிரதமர் மோடி சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில், "எனது சகோதரர் முகமது பின் ஜாயத் அல்நயானை நேரில் வரவேற்றேன். அவரது வருகை இந்தியா, ஐக்கிய அரபு அமீரகம் இடையிலான உறவு, நட்பின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கிறது" என்று தெரிவித்துள்ளார்.

பொருளாதாரம், பாதுகாப்பு குறித்து இரு நாடுகளின் தலைவர்களும் முக்கிய ஆலோசனை நடத்தியதாக இந்திய வெளியுறவு துறை தெரிவித்துள்ளது. மேலும் காசா, ஈரான், ஏமன் விவகாரங்கள் குறித்தும் இரு தலைவர்களும் விரிவாக விவாதித்தனர் என கூறப்படுகிறது.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, சவூதி அரேபிய இளவரசர் சல்மான் ஆகியோருடன் பிரதமர் நரேந்திர மோடிக்கு நெருங்கிய நட்புறவு நீடிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# காஸா அமைதி வாரியத்தில் சேருமாறு புடினுக்கு அழைப்பு

உக்ரைனில் போர் தீவிரமடைந்து வரும் நிலையில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் காஸா அமைதி வாரியத்தில் சேர ரஷ்யாவின் விளாடிமிர் புடினுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய மோதல்களைத் தீர்ப்பதுடன், காஸாவில் நிர்வாகம் மற்றும் புனரமைப்புப் பணிகளைக் கண்காணிப்பதையும் நோக்கமாகக் கொண்டதாகக் கூறப்படுகிறது ட்ரம்பின் இந்த அமைதி வாரியம்.

நேற்று திங்கள் கிழமை விடுக்கப்பட்ட இந்த அழைப்பு, உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஏறக்குறைய 4 வருடப் போர் தொடரும் நிலையிலும், அங்கு ஒரு சமாதான ஒப்பந்தம் எட்டப்படாமல் இருக்கும் சூழ்நிலையிலும் விடுக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வர ட்ரம்ப் தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வந்தாலும், தான் பதவியேற்ற 24 மணி நேரத்திற்குள் போரை நிறுத்திவிடுவேன் என்று ஒரு வருடத்திற்கு முன்பு ட்ரம்ப் கூறியிருந்தார்.

ஒரு பக்கம் போர் தீவிரமடைந்து வர, மறுபக்கம் சமாதானப் பேச்சுவார்த்தைகளும் தொடர்கின்றன, ஆனால் அதன் வேகம் மீண்டும் குறைந்துவிட்டது.

இந்தநிலையில்,ட்ரம்ப்தாமேதலைமை வகிக்கும் இந்த காஸா அமைதி வாரியத்தில் இடம்பெறுவதற்காக, வெள்ளை மாளிகை உலகம் முழுவதிலும் உள்ள முக்கியப் பிரமுகர்களைத் தொடர்பு கொண்டுள்ளது.



இந்தியாவின் நரேந்திர மோடிக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தாலும், உடனடியான பதில் ஏதும் தெரிவிக்கப்படவில்லை. ஆனால், பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவல் மேக்ரான் இந்த அழைப்பை நிராகரிக்க இருக்கிறார் என தகவல் வெளியாகியுள்ளது.

இதனிடையே, அமைதிக்கான இந்த வாரியத்தில் சேருவதற்கு ஜனாதிபதி புடினுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று கிரெம்ளின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் தெரிவித்தார்.

புடின் இதில் சேர விருப்பம் கொண்டுள்ளாரா என்பது குறித்துக் குறிப்பிடாமல், அந்த வாரியத்தின் அனைத்து நுணுக்கங்களையும் அமெரிக்காவுடன் தெளிவுபடுத்திக்கொள்ள ரஷ்யா முயன்று வருவதாக அவர் கூறினார்.

புடினின் கூட்டாளியான பெலாரஸ் ஜனாதிபதி அலெக்சாண்டர் லுகாஷென்கோவையும் இந்தக் குழுவில் சேருமாறு ட்ரம்ப் அழைப்பு விடுத்துள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

பல ஆண்டுகளாக, இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனியர்கள் உட்பட மத்திய கிழக்கின் அனைத்து முக்கிய தரப்பினருடனும் உறவுகளைச் சமநிலைப்படுத்த ரஷ்யா முயற்சித்து வந்துள்ளது.

ஆனால், காஸாமீது இஸ்ரேல் தொடுத்துள்ள இரண்டாண்டுகளுக்கும் மேலான இனப்படுகொலை போரும், 2022 இல் ரஷ்யா உக்ரைன் மீது படையெடுத்ததும் தொடங்கியதிலிருந்து, புடின் இஸ்ரேலிடமிருந்து விலகி, ஈரான் போன்ற அதன் எதிரிகளுடனான உறவுகளை வலுப்படுத்தி வருகிறார்.

அது மட்டுமின்றி, மேற்கத்திய நாடுகளின் தனிமைப்படுத்தல் அதிகரித்து வரும் நிலையில், ரஷ்யா வளைகுடா அரபு நாடுகளுடன் நெருங்கிய உறவுகளையும் நாடியுள்ளது.

மேலும், காஸாவில் இஸ்ரேல் நடத்தும் போரை கிரெம்ளின் தொடர்ந்து விமர்சித்துள்ளதுடன், நிதானத்தைக் கடைப்பிடிக்குமாறும் அழைப்பு விடுத்துள்ளது.



# சீனாவை அச்சுறுத்தும் சனத்தொகை வீழ்ச்சி குழந்தை பெற்றுக்கொள்ள ஆர்வம் இல்லை!

உலகின் இரண்டாவது அதிக மக்கள் தொகை கொண்ட நாடான சீனா, தற்போது கடுமையான சனத்தொகை வீழ்ச்சியை சந்தித்து வருகிறது.

2025ஆம் ஆண்டின் புள்ளி விவரங்களின்படி, அந்த நாட்டின் மக்கள் தொகை தொடர்ச்சியாக நான்காவது ஆண்டாக வீழ்ச்சியடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதன்படி, 2025 இறுதியில் சீனாவின் மொத்த மக்கள் தொகை 140.5 கோடி ஆகும்.

இது 2024 ஆம் ஆண்டை விட 33.9 லட்சம் குறைவாகும்.

விலைவாசி உயர்வு, பொருளாதார அழுத்தம் மற்றும் வேலைப்பளு காரணமாக இளைஞர்கள் திருமணம் மற்றும் குழந்தை பெறுவதில் ஆர்வம் காட்டாமையே இதற்கு முக்கியக் காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடா முரசு

பக்கங்கள் - 03

செவ்வாய்க்கிழமை 20/01/2026

வெளிநாட்டுத் தொழிலாளர்கள் எண்ணிக்கை கனடாவில் பல ஆண்டுகளுக்குப் பின்னர் சரிவு



C2







# கனடா முழுவதும் கடும் குளிர்கால வானிலை: பனிப்புயல், பலத்த காற்று குறித்து எச்சரிக்கை

கனடாவின் பல பகுதிகளில் கடுமையான குளிர்கால வானிலை நிலவி வருவதால், பனிப்புயல், பலத்த காற்று மற்றும் கடும் குளிர் தொடர்பான எச்சரிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.

நயாகரா பிராந்தியம், காவார்த்தா லேக்ஸ், பீட்டர்பரோ, பாரி உள்ளிட்ட பகுதிகளில் பனிப்புயல் எச்சரிக்கைகள் அமலில் உள்ளன.

இப்பகுதிகளில் 20 முதல் 30 சென்றி மீற்றர் வரை பனி பெய்யக்கூடும் எனவும், மேற்கு திசையிலிருந்து மணிக்கு 90 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் எனவும் வானிலை ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

டொரோண்டோ பெரும்பாக பகுதி, யோர்க் பிராந்தியம், வாட்டர்லூ, வெலிங்டன் கவுண்டி உள்ளிட்ட பகுதிகளில் பனியால் பார்வைத் தூரம் குறையும் அபாயம் குறித்து அறிவுறுத்தல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

C2



# கனடாவில் பணவீக்கம் அதிகரிப்பு; புள்ளிவிவர திணைக்களம் தகவல்

கனடாவில் பணவீக்கம் அதிகரித்துள்ளதாக கனடா புள்ளிவிவரவியல் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

இதனால், கடந்த டிசம்பர் மாதத்தில் கோப்பி விலை 30 சதவீதத்துக்கும் அதிகமாக உயர்ந்துள்ளது.

அதே நேரத்தில், புதிய அல்லது உறைந்த மாட்டிறைச்சியின் விலை 16.8 சதவீதம் உயர்ந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மாறாக, பெட்ரோல் விலையில் 13.8 சதவீத சரிவு ஏற்பட்டது.

C2



# வெளிநாட்டுத் தொழிலாளர்கள் எண்ணிக்கை கனடாவில் பல ஆண்டுகளுக்குப் பின்னர் சரிவு

கனடாவில் பல ஆண்டுகளுக்குப் பிறகு, வெளிநாட்டு தொழிலாளர்கள் மற்றும் சர்வதேச மாணவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

2024-2025 காலகட்டத்தில், மொத்தம் 14,954 தற்காலிக குடியிருப்பாளர்கள் குறைந்துள்ளனர் என்று அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, 2023-2024 காலத்தில், கனடா 7.8 லட்சம் புதிய தற்காலிக குடியிருப்பாளர்களை சேர்த்திருந்தது. ஆனால், புதிய குடியேற்றக் கட்டுப்பாடுகள் அமுலுக்கு வந்ததால், 2025 இல் முதல் முறையாக குறைவு பதிவாகியுள்ளது.

டொரோண்டோ நகரம் மிகப்பெரிய பாதிப்பை சந்தித்துள்ளது. 44,792 பேர் குறைந்துள்ளனர்.

அதேபோல், வாங்கூவர் நகரத்தில் 10,098 பேர் குறைந்துள்ளனர். ஒன்றாறியோ, பிரிட்டிஷ் கொலம்பியா, மானிடோபா ஆகிய மாநிலங்களிலும் குறைவு பதிவாகியுள்ளது.

மாறாக, கியூபெக் மற்றும் ஆல்பெர்டா மாநிலங்களில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. மொன்றியல் நகரம் 17,635 புதிய தற்காலிக குடியிருப்பாளர்களை சேர்த்துள்ளது. கல்கரி மற்றும் எட்மண்டன் நகரங்களிலும் ஆயிரக்கணக்கானோர் அதிகரித்துள்ளனர்.

இந்த மாற்றத்திற்கு காரணமாக, குறைந்த ஊதிய வேலை அனுமதிகளுக்கான கட்டுப்பாடுகள், spouse work permit குறைப்பு, study permit cap, post-graduation work permit eligibility குறைப்பு போன்ற புதிய விதிமுறைகள் குறிப்பிடப்படுகின்றன.

கனடாவின் குடியேற்றக் கொள்கை மாற்றங்கள், வெளிநாட்டு தொழிலாளர்கள் மற்றும் மாணவர்களின் வருகையில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

## கனடா முழுவதும்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெற்கு கியூபெக்கின் பெரும்பகுதிகளில், மொன்றியால் மற்றும் லாவல் உள்ளிட்ட நகரங்களில் பனிப்புயல் கண்காணிப்பு அமலில் உள்ளது.

காற்று வேகம் மணிக்கு 70 கிலோ மீற்றர் வரை உயரக்கூடும் என்றும் பயணம் ஆபத்தானதாக இருக்கலாம் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மத்திய மற்றும் கிழக்கு-மத்திய அல்பர்டாவின் பெரும்பகுதிகளில், ரெட் டியர், ட்ரம்ஹெல்லர் உள்ளிட்ட பகுதிகளில் பலத்த காற்று எச்சரிக்கை அமலில் உள்ளது.

வடமேற்கு திசையிலிருந்து மணிக்கு 90 கிலோ மீற்றர் வரை காற்று வீசக்கூடும் என்றும், இது இன்று செவ்வாய்க் கிழமை காலை பலவீனமடையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. உள்ளூர் மின் விநியோக தடங்கல்கள் ஏற்படக்கூடும் என கனடிய சுற்றாடல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

மனிடோபாவின் பெரும்பகுதிகளில், வினிபெக் உள்ளிட்ட பகுதிகளில் கடும் குளிர் எச்சரிக்கை அமலில் உள்ளது. காற்றுக் குளிர்ச்சி 40 டிகிரி செல்சியஸ் வரை குறையக்கூடும் என கணிக்கப்பட்டுள்ளது.

மெட்ரோ வான்கூவர் மற்றும் உள்நாட்டு வான்கூவர் தீவில் அடர்ந்த மூடு பனி காரணமாக பார்வைத் தூரம் கடுமையாகக் குறையும் அபாயம் உள்ளது.

வான்கூவர், பர்னபி, நியூ வெஸ்ட்மின்ஸ்டர், ரிச்ச்மண்ட், டெல்டா, லாங்லி உள்ளிட்ட பகுதிகளில் இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் வரை பார்வைத் தூரம் பூஜ்ஜியத்திற்கு அருகில் இருக்கும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் மேல் நிலவும் உயர் அழுத்த மண்டலம் ஈரப்பதத்தை தரையில் தடுத்து வைத்திருப்பதே இந்த அடர்ந்த மூடுபனிக்குக் காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கனடாவில் பணவீக்கம்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உலகளாவிய அளவில் கச்சா எண்ணெய் அதிக அளவில் கிடைப்பதே பெட்ரோல் விலை குறைவதற்கான முக்கிய காரணம் என தெரிவிக்கப்படுகின்றது.

வான்வழி போக்குவரத்து செலவுகள் ஆண்டு அடிப்படையில் சற்றுக் குறைந்திருந்தாலும், மாதாந்த அடிப்படையில் விமான டிக்கெட் கட்டணங்கள் 34.5 சதவீதம் உயர்ந்துள்ளன.


இது கடந்த ஆண்டின் விடுமுறை கால விலை உயர்வை விடவும் அதிகமாகும். அதேபோல், சுற்றுலா பயணத் திட்டங்களின் செலவும் மாதாந்த அடிப்படையில் உயர்ந்துள்ளது.

குறிப்பாக அமெரிக்காவுக்கான சுற்றுலா இடங்களின் விலை உயர்வே இதற்குக் காரணம் என கனடிய புள்ளி விவரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த டிசம்பர் மாத பணவீக்கத் தரவுகள், கனடா மத்திய வங்கி அடுத்த வாரம் எடுக்கவுள்ள இந்த ஆண்டின் முதல் வட்டி விகித முடிவுக்கு முன்பான இறுதி விலை நிலவரமாகும்.

கடந்த டிசம்பரில் கனடா மத்திய வங்கி தனது அடிப்படை வட்டி விகிதத்தை 2.25 சதவீதமாக நிலைநிறுத்தியிருந்தது.

இதேவேளை, வரி விடுமுறை காரணமாக மொத்த பணவீக்க எண்ணிக்கைகள் உயர்ந்திருந்தாலும், மத்திய வங்கி கவனமாக கண்காணிக்கும் அடிப்படை பணவீக்க அளவுகள் தற்போது சீராகி வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



# ஓக்வில் கார் காட்சியறையில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பில் இருவர் கைது

ஓக்விலில் உள்ள ஒரு கார் காட்சியறையில் நடந்த திருட்டு சம்பவம் தொடர்பாக இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முகமூடி அணிந்த குழுவினர் சுமார் 20 லட்சம் டொலர் மதிப்புள்ள உயர் தர சொகுசு கார்கள் பலவற்றை திருடிச் சென்றுள்ளனர்.

கடந்த 11 ஆம் திகதி க்வீன் எலிசபெத் வே மற்றும் ஃபோர்த் லைன் அருகே உள்ள டுழஉமறழழன டுநயளளைபெ நிறுவனத்தில் நடந்த இந்த சம்பவத்தின் காணொலி வெளியாகியுள்ளது. அந்த காணொலியில், உடைந்த கண்ணாடி கதவின் வழியாக சுமார் 8 பேர் கார் காட்சியறையில் நுழைகின்றனர்.

பின்னர் அவர்கள் வாகனங்களை இயக்குகின்றனர். அத்துடன் அந்த காணொலி காட்சி நிறைவடைகின்றது.

இந்த விடயம் தொடர்பில் கார் காட்சியறையின் மேலாளர் தெரிவிக்கையில், சுமார் 6.2 லட்சம் டொலர் மதிப்புள்ள ஒரு Ferrari, ஒரு Porsche 911 GT3, ஒரு Porsche 911 Carrera, இரண்டு BMW M4 கார்கள், மற்றும் இரண்டு Mercedes S-Class 580 கார்கள் திருடப்பட்டன என தெரிவித்துள்ளார்.

திருடப்பட்ட வாகனங்களில் ஒரு BMW, ஒரு Mercedes, ஒரு Porsche மற்றும் Ferrari ஆகியவை கிரேட்டர் டொராண்டோ பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டன என பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று திங்கள் கிழமை வெளியான புதுப்பிப்பு தகவலில், Peel பிராந்திய பொலிஸார் ஜனவரி 12 அன்று Porsche 911 காரை மீட்டுள்ளனர். அப்போது இரண்டு ஆண்கள் கைது செய்யப்பட்டனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த இருவரும் இந்த உட்புகுந்து திருட்டு சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என விசாரணையில் உறுதி செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

மேற்படி இருவர் மீது உட்புகுந்து திருட்டு மற்றும் குற்ற நோக்குடன் வேடமணிதல் ஆகிய குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஹால்டன் பொலிஸாரின் தகவலின்படி, இருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.




# மது போதையிலிருந்த பொலிஸ் அதிகாரி கைது

கனடாவின் தெற்கு ஜார்ஜியன் பே பொலிஸ் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் மீது, பணியில் இருந்தபோது மது அருந்தி வாகனம் செலுத்தினார் என குற்றம் சாட்டப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 15 ஆம் திகதி இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் இடம்பெற்ற விசாரணையின் முடிவில், 39 வயதுடைய பொலிஸ் அதிகாரி கைது செய்யப்பட்டார்.

சமூக பாதுகாப்பு மற்றும் பொலிஸ் சட்டத்தின் கீழ், குற்றம் சாட்டப்பட்ட அந்த அதிகாரி, ஊதியத்துடன் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே நேரத்தில், இந்த விவகாரம் குறித்து உள் விசாரணை நடத்தப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.